# எட்டரை அடி உயர பட்டறை!



**1949**-ல் துவங்கப்பட்டு பவள விழா ஆண்டை நோக்கி வீறுநடை போடும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆணிவேர் பேரறிஞர் அண்ணா எனில்,

அதன் அடிமரப் பெருங்கனத் தோற்றம் முத்தமிழறிஞர் கலைஞர் எனில்,

அன்றந்த ஆணிவேரையும் அடிமரப் பெருங்கனத்தையும் தன் உயர்ந்த கிளை மலர்களைக் கொண்டு ஓயாது கவரி வீசி ‘ஆகுக, ஆகுக’ என இளைப்பாற்றி வைத்த பெருமையும் பாங்கும் போற்றுதலுக்குரிய இனமானப் பேராசிரியர் அன்பழகனார் அவர்களையே சாரும் என்கிறது திராவிட பேரியக்கத்தின் நெடிய வரலாறு !

அந்தப் பெருமகனுக்குத்தான் பேராசிரியருக்குத்தான் காட்டூர் கிராமத்தில் உதித்த அந்த ஆறடி உயர தமிழ்க் காவலனுக்குத்தான் – எட்டரை அடியில் நிமிர்ந்ததொரு சிலை கண்டு நெகிழ்ந்தார் மரியாதைக்குரிய நமது முதலமைச்சர் முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின்.

பேராசிரியரின் நூற்றாண்டு விழா துவக்கத்தில், திரண்ட நன்றிக் கடனோடு அவரை ‘பெரியப்பா, பெரியப்பா’ என பலமுறை விளித்துக் கொண்டாடினார் முதல்வர் ஸ்டாலின் என்றால் அதற்கு காரணம் உண்டு.

பலரும் பலபடப் பேசி நின்ற அந்த நாளில் ஸ்டாலின் எனும் அந்த ஆகச் சிறந்த தலைவரை தனது அரசியல் அனுபவ நுட்பறிவின் வழியே முதன் முதலில் அடையாளம் கண்டு அங்கீகரித்து நின்றவர் பேராசிரியப் பெருந்தகைதான் !

ஆம், ‘கலைஞருக்கு மட்டுமல்ல எனக்கும் ஸ்டாலின்தான் வாரிசு. அடுத்த தலைமுறையை பாதுகாக்க வேண்டிய கடமை அவருக்கு உண்டு’ என அன்றே சொன்னவர் பேராசிரியப் பெருந்தகை.

இறுதியாக பேசிய ஈரோட்டு திமுக மண்டல மாநாட்டிலும் கூட இருமிக் கொண்டே அவர் அதனைத்தான் வலியுறுத்திச் சென்றார்.

கலைஞரது அரசியல் வாழ்வில் எத்துனையோ பேர் இடையிடையே கருத்து வேறுபாடு கொண்டு விலகிச் சென்றாலும் கூட, ஏறத்தாழ 75 ஆண்டுக் காலம் அவரோடு ஆழ்ந்த நட்பு பாராட்டி இழைந்திருந்தவர் இனமானப் பேராசிரியர் மட்டும்தான்.

இனமானப் பேராசிரியர் கலைஞர் மேல் கொண்டிருந்த ஆழமான நட்பை பாசத்தை உற்று நோக்க நோக்க கம்ப நாட்டாழ்வார் வேட்டுவ குகனது பாத்திரத்தின் மேல் ஏற்றிச் சொன்ன அந்த இரண்டு வரிகள்தான் எனது நினைவிலாடி நெக்கூருகச் செய்கிறது .

**தோழமை என்றவர் சொல்லிய**
**சொல்ஒரு சொல்லன்றோ !?**
**ஏழைமை வேடன் இறந்திலன்**
**என்றெனை ஏசாரோ !?**

ஆம், அரசியல் நட்புக்கு ஆகச் சிறந்த உதாரணமாகி நின்றவர் பேராசிரியர் மட்டுமே !

கொண்ட நண்பர்களிடத்தில் பாசம் செலுத்துவதில் பேராசிரியருக்கு நிகர் அவரே ! எனது தகப்பனார் ஓவியப்பெருந்தகை கே.ஆர்.வேணுகோபால் சர்மா அவர்களிடத்தில் பேராசிரியப் பெருந்தகை பாராட்டிய அன்பு மிகப் பெரிது.



எனது தந்தையாரின் பளபளக்கும் வெற்றிலைப் பாக்கு பெட்டியைக் கண்டால் பேராசிரியர் குதூகலமாகி விடுவாராம். ‘தூரிகை பிடிக்கும் உங்கள் கரத்தில் கொஞ்சம் துளிர் வெற்றிலையை கிள்ளிக் கொடுங்களேன்’ என்று கேட்டு வாங்கி போட்டுக் கொள்வாராம்.

“உங்கள் தாய்மொழி தெலுங்கு. என் தாய்மொழி தமிழ். வயதில் மூத்தவர் தான் என்றாலும் மொழி வழியே பார்த்தால் நீங்கள் எனக்கு இளையவர்தான்...” எனக் கிண்டலடிப்பாராம்.

பேராசிரியரின் மதிக் கூர்மை மிகப் பெரிது என எனது தந்தையார் வியந்து சொல்லக் கேட்டதுண்டு.

பேராசிரியரின் மனைவியார் மறைந்ததோர் நாளில் துக்கம் அனுசரிக்கச் சென்ற எனது தந்தையை கட்டி அணைத்துக் கொண்ட பேராசிரியர் ஒரு சூஃபி ஞானியைப் போல இப்படிச் சொன்னாராம்...

‘தயவுசெய்து நீங்கள் எனக்கு ஆறுதல் சொல்லி விடாதீர்கள். உங்களைப் போன்றவர்களும் எனக்கு ஆறுதல் சொல்லிவிட்டால், பிறகு என் துக்கத்தை வேறெங்குதான் சென்று தொலைப்பேன்.”

ஆம், நிச்சலனமாக இருப்பதுதான் ஆகப் பெரும் ஒப்பாரியாம் !

அப்படிச் சொன்ன அதே பேராசிரியர்தான் எனது தந்தையார் மறைந்த அந்த நாளில், திருவல்லிக்கேணி ஓட்டு வீட்டு மாடியில் ‘ஓ’ வென கதறி அழுதார் !

சுடுகாட்டு ஏற்பாடுகளில் இருந்தவன் அமைச்சர் வந்திருக்கிறார் என்றதும், வெட்டியான் நண்பன் சம்பத்தின் சைக்கிளை வாங்கிக் கொண்டு போலீஸ் தடைகளைத் தாண்டி விரைந்து வந்தேன். அந்த வராண்டாவில் ஓங்கி நின்றிருந்தவர் எனது சின்னஞ்சிறு முகத்தை தன் படர்ந்த இரு கரங்களால் ஆதூரமாக அள்ளிக் கொண்டார். அழுதேன்.

‘அழக்கூடாது தம்பி ! அழுதா, உங்கப்பாவுக்கு பிடிக்காதில்லையா. உறுதியா இருக்கணும். புரியுதா…!? ’ என்றபடி தலைகோதி அணைத்தார்.



தன்னைப் பேட்டி கண்ட தினத்தந்தியிடம், ‘அன்றொருநாள் பாரதியார் மறைந்த இதே வீதியில் எங்கள் திராவிடச் சூரியன் மறையக் கண்டோமே ‘ எனக் கலங்கியபடி மெல்லப் படியிறங்கிப் போனார் !

அந்தப் பாசம்தான் பேராசிரியரின் பேரடையாளம் !

இதோ, பேராசிரியரின் நெடுஞ்சிலைக்கு முன் நிற்கிறேன்.

அது, சிலையல்ல, அல்ல !

எட்டரை அடி உயர திராவிடப் பட்டறை என்றே கொள்கிறேன் !

வலது தோள் துண்டை பற்றியபடி இருக்கும் அந்த வெங்கலக் கரம் யாருமறியாததொரு மாயகணத்தில் சற்றே நீண்டு எனது இடது கன்னத்தை தட்டிக் கொடுத்து விடாதா எனும் நப்பாசையோடு மயங்குகிறேன் !

**வே.ஸ்ரீராம் சர்மா**
எழுத்தாளர்



**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு.**

அறிவாசானின் திருக்குறளை ஆயாசத்தோடு நோகிறேன் !

திருவாரூர் மண்ணில்
தாய் சுவர்ணாம்பாள்
வயிற்றிலுதித்த
பெருந்தகையே
ஐயா, ராமையா !
மீண்டெழுந்து
ராவையா !!

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்





விழுப்புரம் தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட இளைஞர் அணி மாணவர் அணி மருத்துவ அணி சார்பில், நீட் தேர்வை எதிர்த்து விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சி மைதானத்தில் மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம். எல். ஏ தலைமையில் நடைபெற்றது. உண்ணாவிரதத்தை உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி துவக்கி வைத்தார். சிறுபான்மை நலத்துறை அமைச்சர் கே, எஸ். மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர் இரா. இலட்சுமணன், விழுப்புரம் தெற்கு மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம. ஜெயச்சந்திரன், பொருளாளர் இரா. ஜனகராஜ், மாநில தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மாசிலாமணி, சேதுநாதன் , மாநில நிர்வாகி சூர்யா, மாவட்ட துணைச் செயலாளர்கள் டி. என். முருகன், தயா. இளந்திரையன், மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் தேன்மொழி, இளைஞர் அணி அமைப்பாளர்கள் செ. தினகரன், கண்ணன் ஆனந்த், மாணவர் அணி பா. வினோத், மருத்துவர் அணி அமைப்பாளர் காவிய வேந்தன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் , மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள், ஒன்றிய குழு தலைவர்கள், ஒன்றிய குழு துணைத் தலைவர்கள், ஒன்றிய கவுன்சிலர், நகர மன்ற தலைவர், துணை தலைவர்கள், நகர மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி மன்ற தலைவர், துணை தலைவர்கள், பேரூராட்சி உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கல்லூரி மாணவ மாணவிகள், பள்ளி மாணவ, மாணவிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மருத்துவர் மற்றும் செவிலியர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

## இந்தியா-இலங்கைக்கு இடையே விரைவில் தொடங்கும்!

# சர்வதேச பயணிகள் படகுச் சேவைக்கு ஒன்றிய அரசு அனுமதி!

### குஜராத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

*காந்தி நகர், ஆக.21-*

கடலோர மாநிலங்கள் மேம்பாட்டுக் குழுமக் கூட்டத்தில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார்.

19வது கடலோர மாநிலங்கள் மேம்பாட்டுக் குழுமக் கூட்டம் நேற்று முன்தினம் (19.08.2023) காலை 10 மணிக்கு குஜராத் மாநிலம், கெவடியாவில் ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்த சோனவால் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கடலோர மாநிலங்களின் துறைமுக அமைச்சர்கள், ஒன்றிய, மாநில அரசுகளின் அலுவலர்கள், கடல்சார் வாரிய அலுவலர்கள் பங்குபெற்றனர்.

தமிழ்நாட்டின் சார்பாக, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பங்குபெற்று உரையாற்றினார்.

துறைமுகங்களுக்கு, சாலை மற்றும் இரயில் இணைப்பு சாகர்மாலா திட்டத்தின் மூலம், நிதியுதவி என்.ஐ.பி. திட்டங்கள் செயல்படுத்துதல், தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகம், இந்திய துறைமுகங்கள் சட்டவரைவு, மிதக்கும் தோணித்துறை, கடல் விமான செயல்பாடுகள் மற்றும், இந்திய கடலோர காவல்படை நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தல் போன்ற பொருள் தொடர்பாக, இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றும் போது குறிப்பிட்டதாவது:-

தீபகற்ப இந்தியா, குறிப்பாக பண்டைய தமிழ்நாடு, தென்கிழக்கு ஆசியா, இலங்கை மற்றும் மேற்கு நாடுகளுக்கு இடையேயான வர்த்தக இணைப்பில், ஒரு முக்கிய மையமாக விளங்கியது. கொற்கை, குலசேகரப்பட்டினம், காயல்பட்டினம், அழகன்குளம், தேவிப்பட்டினம், நாகப்பட்டினம், பூம்புகார், கடலூர், அரிக்க மேடு, மரக்காணம், மாமல்லபுரம், பழவேற்காடு போன்ற பழங்காலத் தமிழகக் கடற்கரையோரத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க துறைமுகங்கள் மற்றும் கோரமண்டல கடற்கரையில் உள்ள பல துறைமுகங்கள், தமிழ்நாட்டின் பொருளாதார மற்றும் கலாச்சார வரலாற்றில் குறிப்பிடத்தக்க பங்கு ஆற்றிக்கொண்டிருந்தன.

வ.உ.சிதம்பரனார் அவர்கள் 1906-இல், பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நேவிகேஷன் நிறுவனத்துடன் போட்டியிட, சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் நிறுவனத்தை நிறுவினார். கடல்சார் மற்றும் துறைமுகத்துறையில் முன்னோடியாக இருக்கும் இந்த பாரம்பரியத்தை தொடரவும். இந்தியாவை தற்சார்புடைய நாடாக மாற்றவும், தமிழ்நாடு சிறந்த முயற்சிகளை மேற்கொள்ளும் என தெரிவித்தார்கள்.

தமிழ்நாடு, கிழக்கு மற்றும் மேற்குப் பகுதியில் நுழைவாயிலுடன் கூடிய தனித்துவமான கடற்கரையைக் கொண்டுள்ளது. அதன் கடல்சார் மற்றும் துறைமுகத் துறையை வலுப்படுத்த உறுதிபூண்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள துறை முகங்களை மேம்படுத்துவதில் ஒரு செயலூக்கமான மற்றும் தாராளமான அணுகுமுறையை கொண்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் சாகர்மாலா திட்டத்தின்கீழ், மானியமாக தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கு சுமார் ரூ.120 கோடி நிதியுதவி அளித்த ஒன்றிய அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் இந்திய அரசுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவை சர்வதேச அளவில் இணைக்கும் வகையில் இலங்கைக்கு துவங்கவுள்ள முதன்மையான படகுச் சேவைக்கு வெளியுறவு அமைச்சகம் பச்சைக்கொடி காட்டியுள்ளது. முன்னெடுக்கப்பட்டுள்ள சர்வதேச பயணிகள் படகு சேவையானது நீண்டகாலமாக பகிரப்பட்ட வரலாறு மற்றும் ஆழமான கலாச்சார உறவுகளைக் கொண்ட இவ்விரு நாடுகளுக்கும் பயனளிக்கும்.

இது நாடுகளுக்கிடையே உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்தை அதிகரிப்பது மட்டுமல்லாமல், வர்த்தகத்தையும் மேம்படுத்தும். கூடிய விரைவில் பலன் கிடைக்கும் வகையில், இப்படகு சேவையை விரைவில் தொடங்குவதற்கு நாகப்பட்டினம் துறைமுகம் தயாராகி வருகிறது.

இராமமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் இடையே படகு சேவையை புதுப்பிப்பதற்கான ஆலோசனைகள் முன்வைக்கப் பட்டுள்ளதுடன், அதற்கான விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

1980ஆம் ஆண்டுகள் வரை செயல்பாட்டில் இருந்த இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான பாரம்பரிய கடல்வழிகளை புதுப்பிக்கும் வகையில் இத்திட்டம் இருக்கும்.

கடல் வளங்களை நிலையான முறையில் பயன்படுத்துவது என்பது பற்றிய ஒருங்கிணைந்த முடிவுகளுக்காக, ஆற்றல், தொழிற்துறை மற்றும் பொழுதுபோக்கு உள்ளிட்ட கடலின் பல பங்காளர்களை ஒன்றிணைக்கும் கடல் இடஞ்சார்ந்த திட்டமிடலில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது. கடலோர கடல் வளங்களை பாதுகாப்பது நமது பொறுப்பும், கடமையும் ஆகும். அதன் நீண்ட கடற்ரையை பயன்படுத்தி கடலோர சுற்றுலா, பொழுதுபோக்கு கடல்நீர் விளையாட்டுகளை வழங்குவதன் மூலம் நீல பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகிறது.

தமிழகத்தின் மத்தியில் உள்ள தொழிற்சாலை பகுதிகளுக்கு தேவையான சரக்குகளை கையாளக்கூடிய வகையில், கடலூர் பகுதியில் பெரும்திறன் கொண்ட பசுமை வளத்துறைமுகத்தை உருவாக்கவும், தமிழ்நாடு திட்டமிட்டுள்ளது. ஆண்டோன்றுக்கு 10 மில்லியன் மெட்ரிக் டன் (MMT) சரக்குகளை இத்துறைமுகம் கையாளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், தமிழ்நாட்டின் சார்பாக, நெடுஞ்சாலைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு கடல்சார் வாரிய தலைமை நிர்வாக அலுவலர் எஸ்.நடராஜன், மற்றும் மாநில துறைமுக அலுவலர் எம். அன்பரசன் ஆகியோர் பங்குபெற்றனர்.